நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – கீழ்ப்பிரிவு

## Level : Intermediate - Lower

***November 2009***

வினாக்கள் : 50

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களைத் தரப்பட்ட வினாத்தாளில் குறியிடுக.**

1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்து பூரணப்படுத்துக.

**For questions 1 to 4, choose the most suitable word for the underlined space to complete the paragraph.**

**சிட்னி நகர்**





கலா அக்கா பள்ளி விடுமுறைக்கு மெல்பனில் இருந்து சிட்னிக்கு (1) _______________. நாங்கள் அவரை சிட்னி நகரைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் சென்றோம். முதலில் துறைமுகப் பாலத்துக்குச் சென்றோம். அது (2) ______________________ இரும்புப் பாலம். நாங்கள் (3) _________________ பார்த்தது சிட்னி Opera House. அது பாய்மரக் கப்பலைப் போல் இருந்தது. கடைசியாக கலா அக்காவை Centrepoint (4) ___________ பார்க்க அழைத்துச் சென்றோம். அதன் உச்சித் தளத்தில் இருந்து நகரைப் பார்த்து மகிழ்ந்தோம்.

(a) அழகான
(b) கட்டடத்துக்கு
(c) வந்தார்
(d) அடுத்ததாக

5 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு கோடிட்ட இடத்திற்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

**For questions 5 to 10, choose the correct word for the underlined space to complete the statements.**

5. மாலா தன் குடும்பத்தைப் பற்றி ஒரு கட்டுரை _______________.
   (a) எலுதினாள்.
   (b) எளுதினாள்.
   (c) எழுதினாள்.
   (d) எழுதிநாள்.

6. சேகர் பாடசாலை இடைவேளையில் தன் நண்பர்களுடன் கால்ப் பந்து ______________.

(a) விளையாடினான்.
(b) விழையாடினான்.
(c) விளையாடிணான்.
(d) விலையாடினான்.

7. இராமன் காலையில் எழுந்து ____________________. பின் கடவுளை வணங்கினான்.

(a) குலித்தான்.
(b) குவித்தான்.
(c) குமித்தான்.
(d) குளித்தான்.

8. சத்துள்ள ________________ உடற்பயிற்சியும் நமது உடல் வளர்ச்சிக்கு முக்கியம் என்று வைத்தியர் அறிவுரை கூறினார்.

(a) உளவும்
(b) உயிரும்
(c) உணவும்
(d) உப்பும்

9. அம்மா ஆசிரியருடன் ___________________ பேசினார்.

(a) தொலைநோக்கியில்
(b) தொலைபேசியில்
(c) தொளைபேசியில்
(d) தொழைபேச்சியில்

10. மாணவர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் _____________________ .

(a) குளித்தன.
(b) குதித்தனர்.
(c) குவித்தனர்.
(d) குதித்தது.

**11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்ட சொல்லிற்கான எதிர்ச் சொல்லைக் தெரிவு செய்க.**

**For questions 5 to 10, choose the correct word that is opposite in meaning to the underlined word.**

11. சுதா <u>**புதிய**</u> பாடல்களைக் கேட்டு மகிழ்வாள்.

(a) இனிய
(b) பழைய
(c) சிறிய
(d) அழகிய

12. அவன் என் கதையைக் கேட்டதும் <u>**அழத்**</u> தொடங்கினான்.

(a) சினுங்கத்
(b) சிரிக்கத்
(c) நடுங்கத்
(d) தேடத்

13. <u>**அங்கே**</u> ஒரு பெரிய சிங்கம் நிற்பதைக் கண்டு முயல் பயந்தது.

(a) மேலே
(b) அருகே
(c) இங்கே
(d) எங்கே

14. ராமுவின் கையில் ஒரு <u>**பெரிய**</u> புத்தகம் இருந்தது.

(a) தீய
(b) சிறிய
(c) கொடிய
(d) நல்ல

15. பாலன் <u>**காலையில்**</u> கடவுளை வணங்கிய பின் உணவு உண்பான்.

(a) பகலில்
(b) மத்தியானத்தில்
(c) இரவில்
(d) மாலையில்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

பின்வரும் பந்தியை வாசித்து 16 முதல் 19 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**Read the text below and answer the questions 16 to 19.**

## <u>சுவாமி ஞானப்பிரகாசர்</u>

சுவாமி ஞானப்பிரகாசர் இலங்கையில் பிறந்த தமிழ் பேரறிஞர்களுள் ஒருவர். அவர் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய் என்னும் ஊரில் பிறந்தார். இளமைப் பருவத்தில் பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் வைத்திலிங்கம்.

சிறுவயதில் இருந்தே தமிழையும் வேறு பல மொழிகளையும் கற்பதில் ஆர்வம் காட்டினார். தனது ஆரம்பக் கல்வியை அச்சுவேலியில் உள்ள திண்ணைப் பள்ளியொன்றில் கற்றார்.

அவர் மாணவராய் இருந்த பொழுதே ஒழுக்கத்திலும் கல்வியறிவிலும் சிறந்து விளங்கினார். தமிழ்ப் பாடத்திலும் ஆங்கிலப் பாடத்திலும் பல பரிசுகளைப் பெற்றார்.

சுவாமி ஞானப்பிரகாசர் 1901ம் ஆண்டில் குருப் பட்டம் பெற்றார். அன்றில் இருந்து இறைவனடி சேரும் வரை தமிழுக்கும் சமயத்துக்கும் அயராது உழைத்தார். அவர் சமயத்தை வளர்க்கப் பல புத்தகங்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டார். சமய பாடல்களை தமிழில் இயற்றி வெளியிட்டார்.

சுவாமி ஞானப்பிரகாசர் சமூகப் பணியில் ஈடுபட்டு ஏழை மக்களிற்கு அரசாங்கத்திடமிருந்து காணி பெற்று, வீடு கட்டி வாழ்வதற்கு வழிவகுத்தார். வசதி குறைந்த கிராமங்களில் பொது மக்களின் நலன் கருதி தேவாலயங்கள், பாடசாலைகள், கிணறுகளைக் கட்டுவித்தார்.

தமிழ் வரலாற்று ஆராய்ச்சி, யாழ்ப்பாண வரலாறு, ஈழத்துத் தமிழ் வரலாறு, பண்டைய இந்திய நாகரிகம், தமிழ்ச் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி என்பன தமிழின் வளர்ச்சிக்காக இவர் எழுதிய நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

இவரை இலங்கையின் தேசிய வீரர்களுள் ஒருவராகப் போற்றி, அவர் உருவம் பதித்த தபால் முத்திரை (Stamp) ஒன்று 1981ம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி வெளியிடப்பட்டது.

16. சுவாமி ஞானப்பிரகாசர் எந்த ஊரில் பிறந்தார்?

(a) மானிப்பாய்
(b) யாழ்ப்பாணம்
(c) சங்கானை
(d) அச்சுவேலி

17. சுவாமி ஞானப்பிரகாசர் செய்த சமூகத் தொண்டுகளில் ஒன்று?

(a) தபால் முத்திரைகளை வெளியிட்டார்.
(b) ஏழை மக்கள் அரசாங்கத்திடமிருந்து காணி பெற்று வீடு கட்டி வாழ்வதற்கு வழிவகுத்தார்.
(c) இலங்கையில் போர் வீரராகப் பணியாற்றினார்.
(d) இலங்கையில் வைத்தியராகப் பணியாற்றினார்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

18. இவர் எழுதிய நூல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை சில?

(a) தமிழ் வரலாற்று ஆராய்ச்சி
(b) ஈழத்துத் தமிழ் வரலாறு
(c) யாழ்ப்பாண வரலாறு
(d) மேற் கூறிய மூன்றும்.

19. இவரை இலங்கையின் தேசிய வீரர்களுள் ஒருவராகப் போற்றி கௌரவிக்க என்ன செய்யப் பட்டது?

(a) ஏழை மக்கள் அரசாங்கத்திடமிருந்து காணி பெற்றனர்.
(b) மக்கள் சமூகப் பணியில் ஈடுபட்டனர்.
(c) அவர் உருவம் பதித்த தபால் முத்திரை வெளியிடப்பட்டது.
(d) மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப் பட்டது.

**20 முதல் 22 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பன்மைச் சொல்லை தெரிந்து அவற்றை பூரணப்படுத்துக.**

**For questions 20 to 22, choose the correct word that is plural to the underlined word to complete the statements.**

20. <u>**மாணவன்**</u> பரீட்சையில் வெற்றி பெற்றார்கள்.

(a) மாணவி
(b) மாணவர்கள்
(c) அவர்கள்
(d) அவன்

21. அம்மாவும் அப்பாவும் என்னுடன் பாடசாலைக்கு <u>**வந்தான்**</u>.

(a) வந்தது
(b) வந்தார்கள்
(c) வரும்
(d) வந்தோம்

22. <u>**நான்**</u> தினமும் தமிழ் மொழி வாழ்த்துப் பாடிய பின்னர் எமது பாடசாலை அதிபர் அறிவித்தல்களைக் கூறுவார்.

(a) நீ
(b) அவர்கள்
(c) நீங்கள்
(d) நாங்கள்

**23 முதல் 26 வரையுள்ள வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு பொருத்தமான வேறு சொல்லைத் தெரிவு செய்க.**

**For questions 23 to 26, choose the word that is similar or closest meaning to the underlined words.**

23. ஆசிரியர் கேட்ட வினாவிற்கு வாணியும் கண்ணனும் **விடை** அளித்தார்கள்.

(a) கேள்வி
(b) கடிதம்
(c) புத்தகம்
(d) பதில்

24. மாமா கடைக்காரரிடம் **பணத்தைக்** கொடுத்து புத்தகத்தை வாங்கினார்.

(a) பெட்டியைக்
(b) பொன்னைக்
(c) பொருளைக்
(d) காசைக்

25. சந்திரனும் அவன் தங்கை மீராவும் விமானம் **ஆகாயத்தில்** பறப்பதை பார்த்து மகிழ்ந்தார்கள்.

(a) காற்றில்
(b) நிலத்தில்
(c) வானத்தில்
(d) மைதானத்தில்

26. அம்மா **அணிந்திருந்த** சேலையில் இருந்த பல நிறப் பூக்களும் இலைகளும் எனக்கு ஒரு பூந்தோட்டத்தை நினைவுபடுத்தின.

(a) உடுத்திருந்த
(b) பார்த்திருந்த
(c) வேண்டிய
(d) வைத்திருந்த

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**27 முதல் 37 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**Choose the best answer for the questions 27 to 37.**

27. கோவலன் கண்ணகியின் எந்தப் பொருளை விற்பதற்காக மதுரைக்கு சென்றான் என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது?

(a) மோதிரத்தை
(b) காற்சிலம்பை
(c) காதணியை
(d) செருப்பை

28. கலை நிகழ்ச்சிகள் நடக்கும் விழா கலை விழா. புத்தகம் முதன்முதலில் சபையோருக்கு அறிமுகம் செய்யும் விழா?

(a) நூல் விமர்சன அரங்கு
(b) திருமண விழா
(c) புத்தக வெளியீட்டு விழா
(d) திருவிழா

29. அவுஸ்திரேலியாவின் பாராளுமன்றம் எந்த நகரில் உள்ளது?

(a) மெல்பன்
(b) பேர்த்
(c) கன்பரா
(d) சிட்னி

30. "கவிச்சக்கரவர்த்தி" என அழைக்கப்பட்ட கவிஞரின் பெயர் என்ன?

(a) கம்பர்
(b) திருவள்ளுவர்
(c) சுப்பிரமணிய பாரதியார்
(d) இளங்கோ அடிகள்

31. "கிறிஸ்து பிறந்த தினம்" எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?

(a) தை
(b) மார்கழி
(c) சித்திரை
(d) ஆடி

32. "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி வாழிய வாழியவே" என்ற பாடலைப் பாடியவர் யார்?

(a) ஔவையார்
(b) கம்பர்
(c) திருவள்ளுவர்
(d) சுப்பிரமணிய பாரதியார்

அடுத்த பக்கத்தில் தொடரும்.

33. “ஆறுவது சினம்” என்று அறிவுரை கூறியவர் யார்?

(a) திருவள்ளுவர்
(b) பாரதியார்
(c) கம்பர்
(d) ஔவையார்

34. மாங்காய் கொத்துக் கொத்தாய் காய்க்கும். மாணவர்கள்

(a) சாரை சாரையாக நிற்கிறார்கள்.
(b) வரிசை வரிசையாக நிற்கிறார்கள்.
(c) அடுக்கு அடுக்காக நிற்கிறார்கள்.
(d) மந்தை மந்தையாக நிற்கிறார்கள்.

35. இராமாயணத்தில் சீதையைச் சிறையில் வைத்திருந்த அரக்கன் யார்?

(a) கும்பகர்ணன்
(b) விபீடணன்
(c) இராவணன்
(d) இந்திரஜித்து

36. ‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’ என்று சொல்வதற்கு காரணம் என்ன?

(a) உணவுக்குச் சுவையைக் கொடுப்பது உப்பு.
(b) கடலில் இருந்து உப்புக் கிடைக்கிறது.
(c) நிலத்தில் இருந்து உப்புக் கிடைக்கிறது.
(d) நீரை ஆவியாக்கி உப்பு எடுக்கப் படுகிறது.

37. நாய் குரைப்பது போல் குதிரை

(a) கூவும்.
(b) கதறும்.
(c) கனைக்கும்.
(d) பிளிறும்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**38 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி வாக்கியங்களை அமைத்துக் காட்டுக.**
**For questions 38 to 39, arrange the words in the best way to form meaningful statements.**

38. ஒன்று / மாம்பழம் / தலையில் / அவனுடைய / விழுந்தது.
   (a) தலையில் ஒன்று மாம்பழம் அவனுடைய விழுந்தது.
   (b) ஒன்று மாம்பழம் விழுந்தது தலையில் அவனுடைய.
   (c) அவனுடைய தலையில் மாம்பழம் ஒன்று விழுந்தது.
   (d) அவனுடைய ஒன்று தலையில் மாம்பழம் விழுந்தது.

39. வாணியும் / பள்ளிகூடத்தில் / திரும்பினார்கள் / தமிழ்ப் / கண்ணணும் / இருந்து / வீடு.
   (a) வீடு வாணியும் கண்ணணும் தமிழ்ப் பள்ளிகூடத்தில் இருந்து திரும்பினார்கள்.
   (b) வாணியும் தமிழ்ப் பள்ளிகூடத்தில் இருந்து கண்ணணும் வீடு திரும்பினார்கள்.
   (c) தமிழ்ப் பள்ளிகூடத்தில் இருந்து திரும்பினார்கள் கண்ணணும் வாணியும் வீடு.
   (d) வாணியும் கண்ணணும் தமிழ்ப் பள்ளிகூடத்தில் இருந்து வீடு திரும்பினார்கள்.

**40 தொடக்கம் 41 வரையான வினாக்களுக்கு பின்வரும் பாடல் வரிகளை வாசித்து லிடையளிக்கவும்.**
**Read the following part of the poem and answer questions 40 to 41.**

> **“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
> **பகவன் முதற்றே உலகு”**

40. இதில் பகவன் என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து தெரிவு செய்க.
   (a) மன்னன்
   (b) பகைவன்
   (c) கடவுள்
   (d) அரசன்

41. இந்தக் குறலில் எழுத்துக்களுக்கு எது முதலாக உள்ளது எது?
   (a) அகரம்
   (b) கடவுளை
   (c) அம்மா அப்பாவை
   (d) மன்னன்

42 முதல் 45 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்கவும்.

**Read the following poem and answer questions 42 – 45.**

## யார் விரும்புவார்?

இனிப்பு இல்லாத கரும்பினை
   எவரும் விரும்பித் தின்பரோ?

இசை இல்லாத பாட்டினை
   எவரும் விரும்பிக் கேட்பரோ?

மணம் இல்லாத மலரினை
   மகிழ்ந்து எவரும் அணிவரோ?

நிழல் தாராத மரத்தின் கீழ்
   நிற்க எவரும் வருவரோ?

தண்ணீர் இல்லாக் குளத்திலே
   தாகம் தீர்க்க செல்வரோ?

அன்பு இல்லாத மனிதரை
   யார் தான் விரும்பப் போகிறார்?
                        - அழ. வள்ளியப்பா

42. இனிப்பில்லாத எதை ஒருவரும் விரும்பித் தின்ன மாட்டார்கள் எனக் கவிஞர் கூறுகின்றார்?
   (a) பழம்
   (b) இனிப்பு
   (c) கரும்பு
   (d) சோறு

43. கவிதையில் நிழல் தருவது எது என்று கூறப்பட்டுள்ளது?
   (a) மயில்
   (b) மரம்
   (c) மலர்
   (d) தண்ணீர்

44. நாம் தண்ணீரைக் குடிப்பது எதைத் தீர்க்க எனக் கவிஞர் கூறுகிறார்?
   (a) பசியை
   (b) தாகத்தை
   (c) நித்திரையை
   (d) கவலையை

அடுத்த பக்கத்தில் தொடரும்.

45. “அன்பில்லாத மனிதரை ஆர்தான் விரும்பப் போகிறார்?”
என்பதன் பொருள்

(a) அன்பில்லாதவரை எல்லோரும் விரும்புவர்.
(b) அன்பில்லாதவரை ஒருவரும் விரும்ப மாட்டார்கள்.
(c) அன்பில்லாதவரை கண்டு எல்லோரும் பொறாமைப்படுவர் .
(d) அன்பில்லாதவரை எல்லோரும் மதிப்பர்.

**46 முதல் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து வசனத்தை பூர்த்தி செய்க.**

**For questions 46 to 50, choose the best phrase in order to complete the statements.**

46. நாளை ஒருவேளை மாமாவின் கடிதம் _________________ .

(a) வர முடியும்.
(b) வரலாம்.
(c) வர வேண்டும்.
(d) வர வேண்டாம்.

47. எனது புத்தகங்கள் பாரமாக இருக்கிறது. என்னால் வேகமாக _________________ .

(a) நடக்கலாம்.
(b) நடக்க வேண்டாம்.
(c) நடக்க முடியாது.
(d) நடக்க கூடாது.

48. கோயிலில் சனக் கூட்டம் இல்லை. ஆகையினால் அவன் என்னைப் _________________ .

(a) பார்த்திருக்கக் கூடாது.
(b) பார்த்திருக்க முடியாது.
(c) பார்க்கவில்லை.
(d) பார்த்திருக்க வேண்டும்.

49. தமிழ் வகுப்பில் ஆசிரியர் மாணவனைக் கேள்வி கேட்டார். ஆனாலும் திறமையுள்ள மாணவன் பதில் _________________ .

(a) கூறினான்.
(b) கூறவில்லை.
(c) கூறலாம்.
(d) கூறவேண்டும்.

50. என்னால் தனியாக இதை செய்யமுடியும். நீ உன் நேரத்தை _________________ .

(a) வீணாக்க வேண்டும்.
(b) வீணாக்க முடியாது.
(c) வீணாக்க வேண்டாம்.
(d) வீணாக்கக் கூடும்.